# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# பதினோராம் பத்து

## ஏழாம் திருமொழி - நீள்நாகம்
## 'எம்பெருமான் திறத்தில் ஈடுபடாத அவயங்கள் பயன் அற்றன' என்று கூறல்

** நீள் நாகம் சுற்றி * நெடு வரை நட்டு * ஆழ் கடலைப்
பேணான் கடைந்து * அமுதம் கொண்டு உகந்த பெம்மானை **
பூண் ஆர மார்வனைப் * புள் ஊரும் பொன் மலையை *
காணாதார் கண் என்றும் * கண்ண் அல்ல கண்டாமே 1

நீள்வான் குறள் உருவாய் * நின்று இரந்து மாவலி மண் *
தாளால் அளவிட்ட * தக்கணைக்கு மிக்கானை **
தோளாத மாமணியைத் * தொண்டர்க்கு இனியானை *
கேளாச் செவிகள் * செவி அல்ல கேட்டாமே 2

தூயானைத் * தூய மறையானை * தென் ஆலி
மேயானை * மேவாள் உயிருண்டு அமுதுண்ட
வாயானை ** மாலை வணங்கி * அவன் பெருமை
பேசாதார் * பேச்சென்றும் * பேச்சல்ல கேட்டாமே 3

கூடா இரணியனைக் * கூர் உகிரால் மார்விடந்த *
ஓடா அடல் அரியை * உம்பரார் கோமானை **
தோடார் நறுந்துழாய் * மார்வனை ஆர்வத்தால் *
பாடாதார் பாட்டென்றும் * பாட்டல்ல கேட்டாமே 4

மை ஆர் கடலும் * மணி வரையும் மாமுகிலும் *
கொய் ஆர் குவளையும் * காயாவும் போன்று இருண்ட
மெய்யானை * மெய்ய மலையானைச் * சங்கேந்தும்
கையானை * கை தொழாக் * கை அல்ல கண்டாமே 5

கள்ளார் துழாயும் * கணவலரும் கூவிளையும் *
முள்ளார் முளரியும் * ஆம்பலும் முன் கண்டக்கால் **
புள்ளாய் ஓர் ஏனமாய்ப் * புக்கிடந்தான் பொன் அடிக்கு என்று *
உள்ளாதார் உள்ளத்தை * உள்ளமாக் கொள்ளோமே 6

கனையார் கடலும் * கருவிளையும் காயாவும்
அனையானை * அன்பினால் ஆர்வத்தால் ** என்றும்
சுனையார் மலர் இட்டுத் * தொண்டராய் நின்று *
நினையாதார் நெஞ்சென்றும் * நெஞ்சல்ல கண்டாமே 7

வெறியார் கருங்கூந்தல் * ஆய்ச்சியர் வைத்த *
உறியார் நறுவெண்ணெய் * தான் உகந்து உண்ட
சிறியானை ** செங்கண் நெடியானைச் * சிந்தித்து
அறியாதார் * என்றும் அறியாதார் கண்டாமே 8

** தேனோடு வண்டாலும் * திருமாலிருஞ்சோலை *
தான் இடமாக் கொண்டான் * தடமலர்க் கண்ணிக்காய் **
ஆன்விடை ஏழ் அன்று அடர்த்தாற்கு * ஆளானார் அல்லாதார் *
மானிடவர் அல்லர் என்று * என் மனத்தே வைத்தேனே 9

** மெய் நின்ற பாவம் அகல * திருமாலைக்
கை நின்ற ஆழியான் * சூழும் கழல் சூடி **
கை நின்ற வேற்கைக் * கலியன் ஒலி மாலை *
ஐயொன்றும் ஐந்தும் * இவை பாடி ஆடுமினே 10

**அடிவரவு:** நீள்நாகம் நீள்வான் தூயான் கூடா மையார் கள்ளார் கனை வெறி தேனொடு மெய் மாற்றம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---